

திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி முகையூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் சுலோச்சனா ஏழுமலையின் இல்ல திருமண விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் ஜி.இரவிச்சந்திரன், பிரேமா அல்போன்ஸ், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகரச் செயலாளர் இரா.சக்கரை , ஒன்றிய நிர்வாகிகள் காத்தவராயன், லூயிஸ், வேதாந்தம், முருகவேல், வீரப்பன், இராஜேந்திரன், பழனிவேல் ஐ.டி.ஐ. இராஜேந்திரன், ப்ளோரா மேரி, முனியம்மாள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# திருக்கோவிலூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் இல்ல திருமண வரவேற்பு!

## அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்!

கள்ளக்குறிச்சி, ஜுன் 12 -

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி திருக்கோவிலூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் அஞ்சலாட்சி - அரசகுமார் இல்ல திருமணம் ஜுன் 9ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று விழுப்புரம் மாவட்டம் மயிலம் முருகன் கோவிலில் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து திருமண வரவேற்பு விழா கனகனந்தல் உதயா ரைஸ் மில் வளாகத்தில் ஜுன் 10ஆம் தேதி திங்கள் கிழமை அன்று மாலையில் நடைபெற்றது.

இந்த திருமண வரவேற்பு விழாவிற்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் தலைமையில், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன், தொழிலதிபர் வசந்தம் க.வேலுச்சாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முன்னதாக தமிழ்நாடு பொதுப்பணித்துறை நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எ.வ.வேலு திருக்கோவிலூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் அஞ்சலாட்சி அரசகுமார் இல்லத்திற்கு நேரில் சென்று மணமக்கள் அ.உதயா (எ) உதயகுமார் மற்றும் கோ. காயத்ரி ஆகியோரை வாழ்த்தினார்.

இந்த நிகழ்வில் திருக்கோவிலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ். அய்யனார், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம். ஆர் (எ) ராஜேந்திரன் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வ.கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய குழு துணை தலைவர் தனம் சக்திவேல், அருதங்குடி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், அறங்காவலர் குழு உறுப்பினர், கே.கே.ஆர் ராஜீவ் காந்தி,மேமாலூர் தணிகாசலம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள்,துணைத் தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், பிற அணி நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் முடிவில் பத்திர எழுத்தர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் இரா.அரசகுமார், திருக்கோவிலூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் அஞ்சலாட்சி - அரசகுமார் நன்றி கூறினார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு மற்றும் 101 வது பிறந்த தினத்தை முன்னிட்டு தஞ்சை 42 வது வட்டம் டி.பி.எஸ். நகர் ரேசன் கடை அருகில் தஞ்சை மாநகர தி.மு.க. மத்திய மாவட்ட மருத்துவக் கல்லூரி பகுதியில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மத்திய மாவட்டப் பொருளாளர் எல்.ஜி.அண்ணா தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் வட்டச் செயலாளர் இரா.இராஜமாணிக்கம் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் ஏ.லோகநாதன், செல்வகுமார், சி.பாலமுருகன், செந்தில்குமார், என்.எஸ்.மணி, கரிகடை செல்வராஜ், ஆட்டோ பழனி,சிந்தனை கதிர், விக்கி, சேகர், வேதா குணசேகர், வி.இராமு, பழனி, பீமாராவ், அருணா, குண்டு கார்த்திக்,பிரவின்,ராஜா,ஏ.எம்.ஹாஜா நிஜாமுதீன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஆவடி தான்யாவுக்கு நிதியுதவி!

திருவள்ளூர், ஜுன் 12-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியை அடுத்த வீராபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஸ்டீபன்ராஜ் சௌந்தர்யா தம்பதியினர். இவர்களின் மகள் தான்யா மூன்று வயது வரை சராசரி குழந்தையாக இருந்த தான்யாவின் கன்னத்தில் அரிய வகை முகச்சிதைவு நோய் ஏற்பட்டு நாளடைவில் பாதி முகத்தை சிதைக்கும் அளவிற்கு மாறியது. சிறுமிக்கு பல இடங்களில் சிகிச்சை அளித்து வந்த பெற்றோரால் ஒரு கட்டத்திற்கு மேல் பணம் புரட்ட முடியவில்லை.

இந்த நிலையில் சிறுமி தான்யாவுக்கு இந்த ஆண்டு பள்ளி கட்டணம் 60 ஆயிரம் ரூபாய் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ வழங்கி நன்றாக படிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார் இதில் ஆவடி மாநகர கழக செயலாளர் சன்.பிரகாஷ், திருவள்ளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன் மற்றும் சிறுமி பெற்றோர் இருந்தனர்.

### ஜுன் 15 இல் கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முப்பெரும் விழா!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



ஜுன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டுமென அமைச்சர், மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள் வருமாறு : -

வருகின்ற ஜுன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### தமிழக முதல்வர் சிறப்பு திட்டத்தின் கீழ்

# ஜி.அரியூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ஆதார் மையம்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருக்கோவிலூர், ஜுன் 12 -

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அருகே உள்ள ஜி.அரியூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பு திட்டத்தின் கீழ் படிக்கும் பள்ளியிலேயே மாணவர்களுக்கு ஆதார் வழங்கும் திட்ட தொடக்க விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட கல்வி அலுவலர் லதா தலைமை தாங்கினார். கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன், திருக்கோவிலூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.ஆர். (எ) ராஜேந்திரன் மற்றும் உளுந்தூர்பேட்டை ஒன்றிய குழு தலைவர் ப.ராஜவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர், பள்ளி தலைமை ஆசிரியர் சுமதி வரவேற்று பேசினார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த ஆதார் மையத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஆதார் அடையாள அட்டை வழங்கும் பணியையும் தொடங்கி வைத்தார்.

மேலும் பள்ளி ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளே மாணவ, மாணவிகளுக்கு நடப்பு கல்வி ஆண்டின் பாடப்புத்தகம் வழங்கும் பணியை தொடங்கி வைத்தார்,இந்த நிகழ்ச்சியில் திருக்கோவிலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.அய்யனார், மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வி.கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய குழு துணை தலைவர் காடியார் தனம் சக்திவேல், ஒன்றிய துணை செயலாளர் மேமாலூர் தணிகாசலம், தெற்கு ஒன்றிய நிர்வாகி கே.ஆர்.பி.பிரகாஷ், தகவல் தொழில் நுட்ப அணி அபிஷேக், ஜெயபிரகாஷ் மற்றும் பள்ளி உதவி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருவொற்றியூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜுன் 12 -

திருவொற்றியூர் கிழக்கு பகுதி 14(அ) வட்ட கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழாவை வட்டக் கழகச் செயலாளர் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஏகா.கார்த்திகேயன் ஏற்பாட்டில் பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கபட்டது.

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னதாக கழக கொடி ஏற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் பின்னர் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்.

### ச.சதீஷ்குமார் தலைமை

# ஈரோடு மாநகரில் கழகக் கொடியேற்று விழா!

## மு.சுப்பிரமணியம் – முன்னணியினர் பங்கேற்பு!

ஈரோடு, ஜுன் 12 -

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும். வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி அறிவிப்பிற்கிணங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாள் மற்றும் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி ஈரோடு சோலாரில் உள்ள இளைஞர் அணி கொடி கம்பத்தில் மாவட்ட துணை அமைப்பாளர் ச.சதீஷ்குமார் தலைமையில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், கொல்லம் பாளையம் பகுதி கழக செயலாளர் க.லட்சுமணகுமார், மாநகர அமைப்பாளர் கே.டி. சேந்தப்புகழன் ஆகியோர் முன்னிலையில் 60வது வட்டக் கழக செயலாளர் பாலமுகுந்தன் கொடியேற்றினார் .

தொடர்ந்து சோலாரில் உள்ள அட்சயம் மறுவாழ்வு இல்லத்தில் மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கி.ரகுராம், எஸ்.பாலசுப்பிரமணியம்,ச.சதீஷ்குமார், தெ. ராகவேந்திரன், எஸ்.எஸ். விஜயராஜன்,இரா.நித்தின், ஆகியோர் முன்னிலையில் ரூபாய் 25 ஆயிரம் மதிப்புள்ள அரிசி, மளிகை உள்ளிட்ட பொருள்களை வழங்கினார்கள்.

நிகழ்வில் வீரமணி, செல்ல பொன்னி. க.சின்னையன் ப.க.பழனிசாமி டி.எஸ்குமாரசாமி, ஆர். பொன்னுசாமி, மகாலிங்கம், சு.குணசேகரன், பி. செங்கோட்டையன், ராஜா. இரா.சேகரன் பாத்திமா, வீ.சி.நடராஜன், பொ.ராமச்சந்திரன், வி.செல்வராஜ், க. லட்சுமணகுமார் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் செ.ரமேஷ், எஸ். சசிகுமார், அ.பார்த்திபன், பெ.சீனிவாசன், வி.நவீன்குமார், ஏ.அன்பரசன். மற்றும் கே.எம்.ராஜசேகர் திலகவதி. நைல் ராஜா தண்டபாணி, மணி, சிவா, மதன்குமார் போட்டோஸ் சுப்பு, இளமுருகு சரவணன், ஆர்.பி.பாலு உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை சாம்பசிவம்

ஜுன் 12 (2016)



வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பணியை உதறிவிட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957–ல் பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர்.

கே.வி.குப்பம் ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

வேலூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் – கீ.வ.குப்பம் ஒன்றிய பெருந்தலைவராகவுமம் – முருக்கம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா கைதியாகவும், அதற்கு முன்னர்1962–ல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி, அறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தபோது, அண்ணாவால் "தாடிக்காரர்'என அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. வாசுதேவன்

ஜுன் 12 (2020)



தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**